MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8 / MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# சங்க கால வணிகமும் பொருளாதார வளமும்

**ஆய்வாளர்**

**க. நான்சி கிருபா.**

**பகுதி நேர முனைவர் பட்டஆய்வாளர், தமிழ்த்துறை,**

**டாக்டர். எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகம், சென்னை 95.**

nancymerlin1986@gmail.com **அலைபேசி- 9994183033.**

**நெறியாளர்**

**முனைவர்.இரா. கவிதா.**

**பேராசிரியர், தமிழ்த்துறை,**

**டாக்டர். எம்.ஜி. ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,**

**மதுரவாயில், சென்னை-95.** Kavitha.tamil@drmgrdu.ac.in

**அலைபேசி- 9698116894**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

# Trade and Economic Prosperity in the Sangam Age

**Research Scholar**

**H.Nancy Kirba**

Part-time Ph.D. Research Scholar, Department of Tamil,

Dr. M.G.R. Educational and Research Institute, Chennai – 95.

Email: nancymerlin1986@gmail.com Mobile: 9994183033

**Research Supervisor**

**Dr.R.Kavitha**

Professor,Department of Tamil,

Dr.M.G.R.Educational and Research Institute, Maduravoyal,Chennai-95.

Email:Kavitha.tamil@drmgrdu.ac.in Mobile:9698116894

## ஆய்வுச் சுருக்கம்

பத்துப்பாட்டு நூல்கள் காட்டும் தமிழர்களின் வணிக மரபும், பொருளாதார வளமும் குறித்து இவ்வாய்வுக் கட்டுரை விளக்கமாக எடுத்துரைக்கின்றது. சங்க இலக்கியத்தில் இடம்பெறும் செய்திகள் தமிழர் வாழ்க்கையில் பல்வேறு அம்சங்களை நமக்கு தெளிவாக அறிய உதவுகின்றன. அவ்வாறு, பத்துப்பாட்டு நூல்கள் சங்க காலத்தில் தமிழர்கள் பெற்றிருந்த வணிக முன்னேற்றத்தையும், பொருளாதார செழிப்பையும் எடுத்துரைக்கும் முக்கியமான இலக்கியங்களாக விளங்குகின்றன. இவ்வாய்வு குறிப்பாக பட்டினப்பாலை , மதுரைக்காஞ்சி பெரும்பாணாற்றுப்படை போன்ற நூல்களில் இடம்பெறும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு அக்கால நகர வளர்ச்சி சந்தை அமைப்பு, துறைமுக நகரங்களின் வணிகச் செழிப்பு, கடல்வழி வணிகம் மற்றும் வெளிநாட்டு வர்த்தக தொடர்புகள் போன்றவை விளக்கப்பட்டுள்ளன. மிளகு,முத்து, மணி,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

தங்கம்,நறுமணப் பொருட்கள் போன்றவை அக்காலத்தில் முக்கியமான வணிகப் பொருட்களாக இருந்து பலநாடுகளுடன் பண்டமாற்றுமுறையில் வணிகம் நடைபெற்றது.

இதன் மூலம் சங்க காலத்தின் தமிழர்கள் வணிகத் துறையில் சிறந்து விளங்கி, பல நாடுகளுடன் தொடர்பு கொண்டு பொருளாதார வளர்ச்சி பெற்றிருந்தன என்பதை அறிய முடிகிறது. ஆகையால் பத்துப்பாட்டு நூல்கள் தமிழர்களில் வணிக மரபையும், பொருளாதார செழிப்பையும் விளக்கும் முக்கியமான இலக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன என்பதை இவ்வாய்வுக் கட்டுரையின் சுட்டிக்காட்டுகிறது.

**Abstract**

This research article explains in detail the trade traditions and economic prosperity of the Tamils as portrayed in the Pattuppāṭṭu texts. The information found in Sangam literature helps us clearly understand various aspects of Tamil life. In this regard, the Pattuppāṭṭu works stand as important literary sources that reveal the commercial advancement and economic prosperity achieved by the Tamils during the Sangam Age.

This study particularly focuses on literary works such as Pattinappālai, Maduraikkanchi, and Perumpāṇāṟṟuppaṭai. Based on the information found in these texts, the study explains the development of cities, market structures, the commercial prosperity of port towns, maritime trade, and foreign trade relations during the Sangam period. Commodities such as pepper, pearls, gems, gold, and fragrant materials served as important trade goods of the time, and trade was conducted with many foreign countries through barter exchange.

Through these references, it becomes evident that the Tamils of the Sangam Age excelled in commerce, maintained trade relations with many nations, and attained significant economic growth. Therefore, the Pattuppāṭṭu texts serve as important literary evidence that explains the trade traditions and economic prosperity of the ancient Tamils. This research article highlights the significance of these works in understanding the commercial heritage and economic affluence of the Sangam Age.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

**Key words;**

Growth of trade - Kaverippoompattinam - Commercial prosperity - Lives and social advancement of merchants - Abundance of trade goods in the Sangam Age.

**திறவுச் சொற்கள்:**

வணிக வளர்ச்சி- காவிரிப்பூம்பட்டினம்-வணிகச் செழிப்பு-வணிகர்களின் வாழ்க்கையும், சமூக உயர்வும்-சங்க கால வணிகப் பொருட்களின் வளம்

**முன்னுரை:**

தமிழ்மொழியின் தொன்மையையும் தமிழர் நாகரிகத்தின் உயர்வையும் வெளிப்படுத்தும் சிறந்த சான்றுகளாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. சங்க காலத்தில் தோன்றிய இவ்விலக்கியங்கள் தமிழர் வாழ்க்கையில் பல்வேறு நிலைகளையும் நமக்கு தெளிவாக உணர்த்துகின்றன. அரசியல், சமூக, பொருளாதாரம், பண்பாடு, கலாச்சாரம் போன்ற துறைகளில் தமிழர்கள் அடைந்திருந்த மேம்பாட்டை சங்க நூல்கள் விளக்கமாக எடுத்துரைக்கின்றன. சங்க இலக்கிய தொகுப்புகளில் எட்டு தொகையும், பத்துப்பாட்டு முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. அவற்றுள் பத்துப்பாட்டு என்பது பத்து நீண்ட செய்யுட்களை உள்ளடக்கிய இலக்கியத் தொகுப்பாகும். இந் நூல்கள் தமிழர் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை வெளிப்படுத்துவதோடு, சங்க காலத்தின் வரலாற்று உண்மைகளை எடுத்துரைக்கும் முக்கியமான ஆதாரங்களாக விளங்குகின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

பத்துப்பாட்டு நூல்கள் தமிழர்களின் சமூக வாழ்க்கை மட்டுமின்றி அவர்களின் பொருளாதார முன்னேற்றம், வணிகத் திறன், கடல் வாணிகம், நகர வளர்ச்சி, சந்தை அமைப்பு, துறைமுக நகரத்தின் செழிப்பு, வெளிநாட்டு வர்த்தக உறவுகள் போன்ற பல்வேறு செய்திகள் தெளிவாகக் காணப்படுகின்றன. சங்க காலத்தில் உலகின் பல நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டு செழித்து விளங்கியதையும் இந்நூல்கள் எடுத்துரைக்கின்றன. இதனால் தமிழர்கள் வணிகத் துறையில் பெற்றிருந்த முன்னேற்றத்தையும், அவர்களின் பொருளாதார வளத்தையும் அறிய பத்துப்பாட்டு நூல்கள் முக்கியமான ஆதாரங்களாக அமைகின்றன. ஆகையால் பத்துப்பாட்டு நூல்களில் இடம் பெறும் வணிகச் செய்தி சங்கத்தமிழர் வரலாற்றையும்.பொருளாதார வளர்ச்சியையும் விளக்கும் முக்கியமான சான்றாகக் கருதப்படுகின்றது.

**தமிழர்களின் வணிக வளர்ச்சி:**

சங்க காலத்தில் தமிழர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்ததோடு பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு தங்கள் வாழ்க்கையை முன்னேற்றிக் கொண்டனர். விவசாயம் தொழிலாக இருந்தாலும், அதற்கு அடுத்ததாக வணிகத் தொழிலும் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது.தமிழர்கள் தங்கள் நாட்டில் கிடைக்கும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி பலவகையான பொருட்களை உருவாக்கி, அவற்றைப் பிற நாடுகளுடன் பரிமாறிக் கொண்டனர். அக்காலத்தில் சங்க காலத்தில் கிடைத்த மிளகு, முத்து, மணிகள், யானைத்தந்தம், நறுமணப் பொருட்கள் போன்றவை உலக நாடுகளில் பெரும் மதிப்பைப் பெற்றிருந்தன. இப்பொருட்கள் கடல் வழியாகப்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

பல நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டது.

குறிப்பாகச் சங்க காலத்தில் மிளகு வெளிநாடுகளில் பெரும் புகழைப் பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அதே போல வெளிநாடுகளிலிருந்து பல பொருட்கள் நம் நாட்டிற்கும் வந்தன. தங்கம், மணிக்கற்கள், அழகிய ஆடைகள் போன்ற பொருட்கள் கடல் வழிகளாக வழியாகவும், நில வழியாகவும் கொண்டு வரப்பட்டது. இவ்வாறு பொருட்கள் பரிமாறப்பட்டதன் மூலம் சங்க காலத்தில் வணிக வளர்ச்சி பெற்று நகரங்கள் பொருளாதாரத்தில் ரீதியாக செழித்து விளங்குகின.

**“ நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்**

**காலில் வந்த கருங்கறி மூடையும்”**

**(பட்டினப்பாலை -185-186)**

என்று கடல் வழியாகவும், நில வழியாகவும் பலவகைப் பொருட்கள் நகரங்களுக்குக் கொண்டு வரப்பட்டதைப் புலவர் எடுத்துரைக்கின்றார். இதன் மூலம் சங்க காலத்தில் வணிகம் பரந்த அளவில் நடைபெற்றதையும் வணிக வளம் பெற்றதையும் அறிய முடிகிறது.

**காவிரிப்பூம்பட்டினத்தின் வணிகச்செழிப்பு:**

பத்துபாட்டு நூல்களில் தமிழர்களின் வணிக வாழ்க்கையை மிகவும் தெளிவாக எடுத்துரைக்கும் நூலாக பட்டினப்பாலை விளங்குகின்றது. இந்நூல் சோழ நாட்டின் புகழ்பெற்றத் துறைமுக நகரமான காவிரிப் பூம்பட்டினத்தின் பெருமையையும் அதன் வணிக வளத்தையும் சிறப்பாக விளக்குகின்றது. சங்க காலத்தில் காவிரிப்பூம்பட்டினம்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

முக்கியமான வணிக நகரமாக இருந்தது. கடல் வழியாக பல நாடுகளிலிருந்து வணிகக் கலங்கள் வந்த துறைமுகத்தில் பல வகையான பொருட்களைக் கொண்டு வந்து இறக்கின. அதனால் அந்த நகரம் எப்போதும் மக்கள் கூட்டம் நிறைந்து செழிப்பான நகரமாகவே விளங்கியது.

**“ நறவுநொடைக் கொடியோடு**

**பிறபிறவு நனவிரை இ,**

**பல்வேறு றுருவிற் பதாகை நீழல்**

**செல்கதிர் நுழையாச் செழு நகர் வரைப்பின்**

**சொல்லா நல் இசை அமரர் காப்பின்,**

**நீரியின் வந்த நிமிர் பரிப் புரவியும்”**

**(பட்டினப்பாலை- 178-185)**

காவிரிப்பூம்பட்டிணத்தில் நடைபெற்ற வணிக வாழ்க்கையைப் பற்றி புலவர் குறிப்பிடுகிறார். அந்நகரத்தில் இரவில் நடைபெறும் வணிகம் அல்லங்காடி என்றும், பகலில் நடைபெறும் வணிகம் நாளங்காடி என்றும் அழைக்கப்படுகிறது. இச்சந்தைகளில் பல நாடுகளிலிருந்து கடல் வழியாகக் கொண்டு வரப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. இதன் மூலம் காவிரிப்பூம்பட்டினம் சங்க காலத்தின் வணிகச் செழிப்புடன் விளங்கிய நகரமாக இருந்தது என்பதை அறிய முடிகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

**வணிகத் திறன்:**

சங்க காலத்தில் தமிழர்கள் வணிகத் துறையில் சிறந்து விளங்கியதற்கான காரணங்களுள் ஒன்று அவர்களின் கடல் வணிகத் திறன் ஆகும். தமிழர்கள் கடல் வழியாக பல நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்ட பொருட்களைப் பரிமாறிக் கொண்டனர். அக்காலத்தில் தமிழ்நாட்டின் துறைமுக நகரங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து வணிகக் கப்பல் வந்து தங்கி பல வகையான பொருட்களைக் கொண்டு வந்தன. ரோமர்கள் கிரேக்கர்கள் போன்ற வெளிநாட்டு வணிகர்களும் தமிழ்நாட்டிற்கு வந்து பொருட்களை வாங்கி சென்றதாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இதன் மூலம் அக்காலத்திலும், இக்காலத்திலும் உலக நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்த ஒரு செழிப்பான நகராக விளங்கியது என்பதை அறிய முடிகிறது.

**“கொள்வதூஉ மிகை கொளாது கொடுப்ப**

**தூஉம்குறை கொடாது.**

**பட்டினம்பாலை - (210-211)**

காவிரிப்பூம்பட்டினம் கடல் வணிகத்தின் மூலம் பல நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்த நகரமாக இருந்ததை எடுத்துரைக்கின்றன. பல நாடுகளிலிருந்து வணிகர்கள் வந்து பொருட்களை வாங்கி விற்றதால் அந் நகரம் வணிக செழிப்புடன் இருந்ததை அறிய முடிகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

**வணிக வளம்:**

பத்துப்பாட்டு நூல்கள் ஒன்றாக மதுரைக்காஞ்சி பாண்டியன் நாட்டின் தலைநகரான மதுரையின் பெருமையையும் நகர வாழ்வின் செழிப்பையும் விரிவாக எடுத்துரைக்கும் சிறப்புடைய நூலாகும். இந் நூலில் மதுரை நகரத்தின் அழகும் வளமும் மட்டுமல்லாது, அங்கு நடைபெற்ற வணிகச்செயல்பாடுகளும் நயமுடன் விளக்கப்படுகின்றன. சங்க காலத்தில் மதுரை நகரம் மக்கள் நெரிசலால் நிறைந்த பெரிய நகரமாக விளங்கியது. நகரத்தின் பல இடங்களில் சந்தைகள் அமைந்தது, அங்கு பலவகையானப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. வணிகர்கள் தங்கள் பொருட்களை விற்று வாழ்ந்தனர். இதனால் மதுரை நகரம் வணிகம் செழித்த நகரமாகப் புகழ்பெற்றது.

**“அற நெறி பிழையாது, ஆற்றில் ஒழுகி**

**குறும் பல் குழுவின் குன்று கண்டன**

**பருந்து இருந்துஉகக்கும் பல் மாண் நல் இல்**

**பல் வேறு பண்ட மேடு ஊண் மலிந்து கவினி,**

**(மதுரைக்காஞ்சி- 500- 510)**

மதுரை நகரத்தின் வணிகச் செழிப்பைப் புலவர் நயமாக எடுத்துரைக்கின்றார். பல வகையானப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்ட சந்தைகள் அந்நகரத்தில் இருந்தன. மக்கள் கூட்டம் நிறைந்த அந்த சந்தைகளில் வணிகர்கள் தங்கள் பொருட்களை விற்று வாழ்ந்தனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

இதன் மூலம் சங்க காலத்தில் மதுரை வணிக வளம் நிறைந்த நகரமாகத் திகழ்ந்தது என்பதை அறிய முடிகிறது.

**நகர வணிகச் செழிப்பு:**

பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படை சங்ககால நகரத்தின் வாழ்க்கை முறையையும் பொருளாதார வளத்தையும் நயமாக எடுத்துரைக்கும் நூலாகும். இந் நூலில் பல நாடுகளிலிருந்து பொருட்கள் நகரங்களுக்கு வந்து விற்பனை செய்யப்பட்டதாகக் குறிப்பிடுகிறது. இதனால் நகரங்கள் வணிக வளத்தால் செழித்து விளங்கின என்பதை அறிய முடிகிறது.

**“ நாவாய் சூழ்ந்த நளி நீர் படப்பை,**

**மாடம் ஓங்கிய மணல் மலி மறுகின்**

**பரதர் மலிந்த பல் வேறு தெருவின்**

**சிலதர் காக்கும் சேண் உயர் வரைப்பின்”**

**(பெரும்பாணாற்றுப்படை-320-325)**

பல திசைகளிலிருந்து வந்த பொருட்கள் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டதால் நகரங்கள் செழித்து வளர்ந்தன. அதன் மூலம் சங்க காலத்தில் உள்ளூர் வணிகமும், வெளிநாட்டு வணிகமும் சிறப்பாக வளர்ந்திருந்தது என்பதை அறிய முடிகின்றது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

**வணிகர்களின் வாழ்க்கையும், சமூக உயர்வும்:**

சங்க காலத்தில் வணிகர்கள் சமூகத்தில் மதிப்புமிக்க இடத்தைப் பெற்றிருந்தனர். அவர்கள் நேர்மையுடன் வணிகம் செய்து செல்வம் சேர்த்தனர். இவ்வாறு வணிகர்கள் சங்ககால சமூக வளர்ச்சியில் முக்கிய பங்காற்றினர்.

அக்காலத்தில் வணிகர்கள் பல நகரங்களும் துறைமுகங்களுக்கும் பயணம் செய்து வணிகம் செய்தனர். சிலர் கடல் வழியாகவும், சிலர் நில வழியாகவும் தங்கள் பொருட்களைக் கொண்டு சென்று விற்பனை செய்தனர். இவ்வாறு பல இடங்களுக்கு பயணம் செய்ததன் மூலம் அவர்கள் பல்வேறு மக்களுடனும் நாடுகளுடனும் தொடர்பு கொண்டனர். இதன் காரணமாக பொருளாதார பரிமாற்றத்துடன் கலாச்சார பரிமாற்றமும் ஏற்பட்டது. வணிகர்கள் கொண்டு வந்த பொருட்கள் மட்டுமல்லாமல் புதிய சிந்தனைகள், பழக்கவழக்கம், கலாச்சார அம்சங்களும் சங்க காலத்தில் பரவின. இதனால் தமிழர் சமூக வாழ்க்கை மேலும் செழித்து வளர்ந்தது. மேலும் வணிகர்கள் தங்கள் செல்வத்தை சமூக நலனுக்காகவும் பயன்படுத்தினர். ஆலயங்கள், பொதுநல அமைப்புகள், சந்தைகள் போன்றவற்றின் வளர்ச்சிக்கு அவர்கள் உதவினர். இதனால் வணிகர்கள் சங்க கால சமூகத்தில் உயர்ந்த மரியாதை பெற்றவர்களாகக் கருதப்பட்டனர்.

**“ பல் வேறு பண்டம் இழிதரும் பட்டனத்து**

**ஒல்லன இமிழ் இசை மான, கல்**

**நனந் தலை வினைஞர் கலம்கொண்டு மறுக**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

**பெருங் கடல் குடத்துப் புலவுத் திரை ஓதம்.”**

**(மதுரைக்காஞ்சி-540-545)**

பெரிய நகரங்களில் பல வகையானப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டதையும் அங்கு வணிகர்கள் செழித்து வாழ்ந்ததையும் எடுத்துரைக்கின்றது. வணிகத்தின் மூலம் அவர்கள் செல்வம் சேர்த்ததோடு, சமூகத்தில் உயர்ந்த மரியாதையையும் பெற்றிருந்தனர் என்பதை முடிகிறது.

**வணிகப் பொருட்களின் வளம்:**

சங்க காலத்தில் வணிகம் தமிழர்களின் வாழ்க்கையில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. அக்காலத்தில் தமிழ் நாட்டில் கிடைத்த இயற்கை வளங்களும், கைவினைப் பொருட்களும் வணிகத்தின் மூலம் பலநாடுகளுக்கு சென்றன.தமிழர்கள் உற்பத்தி செய்த பொருட்கள் தரத்திலும் சிறப்பிலும் உயர்ந்ததாக இருந்ததால் அவற்றுக்கு வெளிநாடுகளில் நல்ல மதிப்பு இருந்தது. சங்ககால வணிகத்தில் முக்கியமாக இடம்பெற்ற பொருட்களில் மிளகு, முத்து மணிகள், தங்கம், யானைத்தந்தம், நறுமண பொருட்கள் போன்றவை குறிப்பிடத்தக்கவை. மிளகு அக்காலத்தில் மிகவும் மதிப்புமிக்க வணிகப் பொருளாக இருந்தது. அதேபோல கடலோரப் பகுதிகளில் கிடைத்த முத்துக்கள் அழகிலும் அரிய தன்மையிலும் சிறந்ததாக இருந்ததால் அவை வெளிநாடுகளுக்கு அதிகம் ஏற்றுமதி செய்யப்பட்டது.

**“செல்லா நல் இசை அமரர் காப்பின்,**

**நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்,**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

காலின் வந்த கருங்கறி மூடையும்,

வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்,

குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்,

தென்கடல் முத்தும், குணக்கடல் துகிரும்,

( பட்டினம்பாலை-185-193)

இந்த வரியில் மணிகளும் பொன்னும் தென் மலையில் தோன்றிய சந்தனமும் அகிலும் தென்திசைக் கடலில் பிறந்த முத்துக்களும் கீழ்த்திசைக் கடலில் பிறந்தப் பவளமும் கங்கை ஆற்றினால் விளைந்த பொருட்களும் காவிரி ஆற்றினால் உண்டாகிய விளைச்சலும், ஈழத்தில் இருந்து வந்த பொருட்களும் கடாரத்தில் இருந்து கிடைத்த பொருட்களும் அரிய பெரிய பொருட்களாகச் செல்வ செழிப்புடன் திகழ்ந்ததாக பட்டினப்பாலை வரிகள் நமக்கு உணர்த்துகின்றது. பல இடங்களிலிருந்து வணிகப் பொருட்கள் வந்து சேர்ந்து அக்கால நகரங்கள் வணிகச் செழிப்புடன் இருந்ததை உணர்த்துகின்றன. மேலும் மணிகள் மற்றும் தங்கம் போன்றவை செல்வத்தில் அடையாளமாகக் கருதப்பட்டதால் அவற்றுக்கும் பெரும் தேவை இருந்தது. யானைத் தந்தம் மற்றும் பல வகையான நறுமணப் பொருட்களும் வணிகத்தின் முக்கிய பங்காற்றின. இவ்வாறு சங்க காலத்தில் கிடைத்த பொருட்கள் பல நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன. இதன் மூலம். வணிகத் இதன் மூலம் சங்க காலத்தில் வெளிநாடுகளுக்கும் தமிழகத்தில் இடையே வணிகத் தொடர்பு இருந்தது. என்பதை அறிய முடிகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

இந்த வணிகப் பரிமாற்றத்தால் சங்க காலத்தில் செல்வ செழிப்பும் புகழும் பெற்று மிகுந்த வணிக மையமாக விளங்கியது.

முடிவுரை:

பத்துப்பாட்டு நூல்கள் சங்ககாலத் தமிழர்களின் பொருளாதார வாழ்க்கையையும் சமூக வளர்ச்சியையும் வெளிப்படுத்தும் முக்கியமான இலக்கியச் சான்றுகளாக விளங்குகின்றன. இந் நூல் இடம்பெறும் செய்திகள் அக்காலத்தில் வணிகத் துறையில் சிறப்பாக முன்னேற்றம் பெற்றிருந்ததைத் தெளிவாக உணர்த்துகின்றது. குறிப்பாக பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, பெரும்பாணாற்றுப்படை போன்ற நூல்கள் நகரத்தின் செழிப்பையும், வணிக செயல்பாடுகளையும் நன்கு விளக்குகின்றன. கடல்வழி வணிகம், பரபரப்பாக நடைபெற்ற நகரச் சந்தைகள், வெளிநாடுகளுடன் ஏற்பட்ட வர்த்தகத் தொடர்புகள் ஆகியவை சங்க காலத்தில் மிகுந்த வளர்ச்சி அடைந்திருந்தன என்பதை இந்த நூல் தெளிவுபடுத்துகின்றது. இதன் மூலம் சங்க காலத்தில் பொருளாதாரம் வர வளம் பெற்ற நாடாகத் திகழ்ந்தது என்பதை அறிய முடிகிறது. எனவே பத்துப்பாட்டு நூல்கள் சங்ககாலத் தமிழர்களின் வணிகத் திறமை, பொருளாதார முன்னேற்றம் மற்றும் பண்பாட்டுச் செழிப்பை எடுத்துரைக்கும் முக்கியமான இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன. அவை தமிழர் வாழ்வியலையும், வணிக மரபையும் அறிய உதவும் மதிப்புமிக்க இலக்கியச் செல்வங்களாக என்றும் நினைத்திருக்கின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

அடிக்குறிப்பு:-

1. ப-71_நா. அருள் முருகன், பட்டினப்பாலை.
2. ப-70-71_நா. அருள் முருகன், பட்டினப்பாலை.
3. ப-229 வெ. மணி சங்கர், எளிய உரையில் பத்துப்பாட்டு,
4. ப-131 ப.சரவணன்,மதுரைக்காஞ்சி.
5. ப-105 சொ. மகாதேவன், பெரும்பாணாற்றுப்படை.
6. ப-136 ப.சரவணன்,மதுரைக்காஞ்சி.
7. ப-71_நா. அருள் முருகன், பட்டினப்பாலை

உசாத்துணை நூல்கள்

1.பத்துப்பாட்டு ஆராய்ச்சி,டாக்டர்.மா.இராசமாணிக்கனார், சாரதா பதிப்பகம். சென்னை.முதல் பதிப்பு- 2023.

2.இலக்கிய வரலாறு, பேராசிரியர். புலவர் சோம. இளவரசு, மாணிக்கவாசகர் பதிப்பகம்.சென்னை.முதல் பதிப்பு- 1998.

3.மதுரைக்காஞ்சி, ப.சரவணன். தமிழ் தமிழ்நாடு பாட நூல் மற்றும் கல்வியியல் பணிக் கழகம்,சென்னை.முதல் பதிப்பு- 2022

4.பட்டினப்பாலை, நா. அருள் முருகன்.தமிழ் தமிழ்நாடு பாட நூல் மற்றும் கல்வியியல் பணிக் கழகம்,சென்னை.முதல் பதிப்பு- 2022

5.வெ. மணி, சங்கர்,எளிய உரையில் பத்துப்பாட்டு, இளவரசி பதிப்பகம்.வேலூர்.முதல் பதிப்பு- நவம்பர்-2009

6.பெரும்பாணாற்றுப்படை, சொ. மகாதேவன். தமிழ் தமிழ்நாடு பாட நூல் மற்றும் கல்வியியல் பணிக் கழகம்,சென்னை.முதல் பதிப்பு- 2022